# ஒலிக்கும் யாதவர் முரசு
## Olikkum Yadavar Murasu

Volume: 17 Issue: 15 December: 2022 Tamil Monthly Price Rs.10/- Annual Subscription Rs.120/-
முரசு : 17 ஒலி: 15 டிசம்பர்: 2022 தமிழ் மாத இதழ் விலை ரூ.10/- ஆண்டு சந்தா ரூ.120/-

சுபகிருது வருடம் ஐப்பசி - கார்த்திகை மாதம்

| | | | |
|---|---|---|---|
| | உறவுகளோடு<br>இணைவோம் உயர்வோம் | யாதவமே பாரதம்<br>பாரதமே யாதவம் | |



ஸ்ரீ கண்ணபிரான் துணை









# இனிய
# பிறந்த நாள்
# நல்வாழ்த்துக்கள்

முத்தமிழறிஞர்
தலைவர் டாக்டர்

## கலைஞர்



அவர்களின் நல்லாசியோடும், மாண்புமிகு

தமிழக முதல்வர் **தளபதி மு.க. ஸ்டாலின்**

அவர்களின் நல்வாழ்த்துகளோடும் 2022-ஆம் ஆண்டு
டிசம்பர் 30-ந் தேதி பிறந்த நாள் விழா காணும்
திராவிட முன்னேற்றக் கழகத்தின் சிவகங்கை
மாவட்ட கழக செயலாளர் கூட்டுறவுத்துறை அமைச்சர்

மாண்புமிகு K.R. பெரியக்கருப்பன், B.Com., B.L., MLA

அவர்கள், அவர்களது குடும்பமும் ஸ்ரீ கண்ணபிரான் திரு அருளால்
எல்லா வளமும், நலமும், புகழும்,குன்றாத இளமையும்
பெற்று பல்லாண்டு பல்லாண்டு பல நூறு ஆண்டுகள் வாழ்வாங்கு
வாழ ஸ்ரீ மான் நாராயணனை பிரார்த்தித்து கொள்கிறேன்.





அன்புடன் **N.I. சக்திவேல்**

மாநில செயலாளர், தமிழ்நாடு யாதவ மகாசபை, சென்னை-600002.

முரசு 17 ஒலி 15

# ஒலிக்கும்

## யாதவர் முரசு

யாதவர் பேரவையின் செய்தி மாத இதழ்

டிசம்பர் - 2022

## இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள் 2023

உறவுகளுக்கு, வணக்கம்,

வரும் 2023 நம் பேரவையின் திருப்புமுனை ஆண்டாக, வரலாற்றுச் சிறப்புமிக்க ஆண்டாக இருக்கும் என நம்புகிறோம்.

2005 ஆம் ஆண்டு பேரவை துவங்கிய பொழுது, பேரவைக்கு என ஒரு தனி கட்டிடம் அமைய வேண்டும் என்ற நோக்கில் செயல் திட்டம் தீட்டி இன்று 2022 முடிவில் 2023 ஆரம்பத்தில் சென்னையின் மைய பகுதியில் பேரவைக்கு என "யாதவ பவன்"கட்டிடம் 3கோடி ரூபாய் செலவில் கட்டி முடியும் தருவாயில் உள்ளது. "யாதவ பவன்" 2023ல் யாதவர்களின் பயன்பாட்டிற்கு வரும்.

2022முடியும் தருவாயில், பேரவையில் இது நாள் வரை செயல்பாட்டினை திரும்பி பார்க்கும் பொழுது 2005 முதல் 2022 வரை வருடம் ரூ.5 லட்சம் முதல் 10 லட்சம் வரையில் (on an average per year) சுமார் ஒரு கோடி வரை கல்வி நிதி உதவி அளித்திருக்கிறோம்.பல எளிய யாதவ மாணவ மாணவியர்கள் கல்வி நிதி உதவி பெற்று பயன்பெற்றுள்ளனர்.

கல்வி உதவியைத் தாண்டி மாற்றுத் திறனாளிகளான (Differently abled) யாதவர்களுக்கு Wheel Chair, வேலைசெய்யும் பொழுது கை இழந்த இளைஞருக்கு செயற்கை கை பொருத்தி உதவி உள்ளோம்.

ஆண்டுதோறும், பொதுக்குழு நடத்தி வரவு செலவுகள் தணிக்கை செய்யப்பட்டு உரிய காலத்தில் பதிவாளரிடம் (Registrar of Society) சமர்ப்பிக்கப்படுகிறது. 3 ஆண்டுகளுக்கு ஒரு முறை புதிய நிர்வாகிகளை ஜனநாயக முறையில் தேர்ந்தெடுக்கிறோம்.

பேரவைக்கு என "ஒலிக்கும் யாதவர் முரசு" பத்திரிகை சந்தாதாரர்களுக்கு கைபிரதியும், மற்ற உறுப்பினர்களுக்கு சமூக வலைதலத்திலும் அனுப்பி வைக்கப்படுகிறது. இதற்கெனத் தனியாக ஒரு **"Editorial Board"** செயல்படுகிறது.


## Editorial Board

**ஆசிரியர்**

**டாக்டர். ஆர். காந்தையா**, M.S.(General)

**இணை ஆசிரியர்**

**திரு.ஜி.உலகநாதன் யாதவ்,**
எம்.ஏ.,பி.எல், (வடக்கு)

**திரு.ஆர்.ராஜாராமலிங்கம்யாதவ்**
எம்.ஏ., PGDJMC (தெற்கு)

**திருமதி. மெய்ஸ்ரீ யாதவ்**
B.sc,, MA,,(Ph.d) (மேற்கு)

**உறுப்பினர்கள்**

**திரு. வேலுசாமி யாதவ்**
(கோவை)

**திரு. G. G. கண்ணன் யாதவ்**
(சேலம்)

**IT CONSULTANT**

**திருமதி. ஷர்மிளா யாதவ்**
(சென்னை)

**Photographer**

**திரு. ரங்கநாதன் யாதவ்**

**DESIGNER**

**செல்வி. பவித்ரா**
(சென்னை)



**பதிவு அலுவலகம்**

**யாதவர் பேரவை**
No. 27/11, பைகிராப்ட்ஸ்ரோடு
2 வது தெரு, இராயப்பேட்டை
சென்னை. 600 014.
Email: yadavarperavai@gmail.com
Phone: 94441 34142.

**அலுவலக நேரம்**
11am to 5pm



**பதிப்பகம்**

**Seaman Graphics**
(சென்னை)

சுய உதவி குழுக்கள் அமைத்து அதன்மூலம் ஆண்டுக்கு 7 லட்சம் வரை வருமானம் ஏற்படுத்தி வருகிறோம். பேரவைக்கு எனத் தனி அலுவலகம் மூன்று கணினி வசதிகளுடன் அமைத்து, தனி IT அணி ஒன்று செயல்படுத்தப்படுகிறது. ஒரு முழு நேர (8 மணிநேரம்) அலுவலக பணியாளர் நியமிக்கப்பட்டுள்ளார்.

பேரவையின் முதன்மைக் குறிக்கோளாகிய கல்விக்கு எனத் தனியாக **YP Welfare Trust** யாதவர் பேரவை நல அறக்கட்டளை உருவாக்கப்பட்டுள்ளது. **YP Welfare Trust** ன் நிர்வாகம் நம் சமூகத்தில் அந்தஸ்தில் உள்ள பெரியோர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் கவனிக்கும் படி ஏற்பாடுகள் செயல்படுத்தப்பட்டுள்ளன.

தனிநபர் ஆதிக்கம், சால்வை அணிவித்தல், Flex Board வைத்தல் ஆகியவை தவிர்க்கப்படுகின்றன. YPWTக்கு அளிக்கப்படும் கல்வி உதவி தொகைக்கு 80G வருமான வரி விலக்கும் பெற்றுள்ளது.

**KFA Krishna Foundation For All** என்ற அமைப்பை நாட்டின் தலை நகரான டெல்லியில் உருவாக்கி யாதவ இளைஞர்களை **Civil Service Examination (IAS, IPS, etc…)** தயார் செய்கிறோம்.

சுமார் 4000 நேர்முறை உறுப்பினர்களையும், 1 லட்சம் மறைமுக உறுப்பினர்களையும் (Digital) கொண்டது நமது யாதவர் பேரவை. யாதவர் பேரவைக்கு என தனியாக மருத்துவர் அணி, சட்ட நிபுணர் அணி, அரசு அலுவலர் அணி, அரசியல் விழிப்புணர்வு அணி, யாதவர் வியாபார சங்கம் யாதவர் பேரவை Matrimonial, ஒலிக்கும் யாதவர் முரசு எனும் மாத பத்திரிகை என பன்முகத்தன்மையுடன் விளங்கும் அமைப்பாகத் திகழ்கிறது.

உற்ற நோக்கத்துடன் செயல்படும் பதிவு பெற்ற யாதவ சங்கங்களை ஒருங்கிணைந்து கூட்டமைப்பு (Federation) ஏற்படுத்தி சமூக நலனில் அக்கறை கொண்ட அமைப்பாக YP உள்ளது.

**Society For The Right of Backward Classes (SFRBC)** தமிழகத்தில் உள்ள பின்தங்கிய (OBC), மிகவும் பின்தங்கிய (MBC) 240+ சமுதாயத்தினரை ஒருங்கிணைத்து கூட்டமைப்பு (Federation) ஏற்படுத்தி சமுதாய பணி ஆற்றி வருகிறோம்.

பின்னோக்கிப் பார்க்கையில் சாமானியர்களான நாம் அதிகாரம், பணம், அரசியல் பின்புலம் இன்றி நாடு / மாநிலம் தழுவிய பதிவு பெற்ற, வருமானவரி விலக்கு பெற்ற யாதவர் பேரவை, யாதவர் பேரவை நல அறக்கட்டளை என உருவாக்கி, 17 ஆண்டுகளாக சமுதாயப் பணி, கல்வியின் அவசியத்தைப் பற்றியும், சமுதாய ஒற்றுமை, வாக்கு வங்கி பற்றியும் தெளிவான தொலை நோக்குடன் செயல்பட்டு வருகிறோம் என மகிழ்வுடன் கூறிக்கொள்கிறோம்.

ஒரு சிறிய ஆனால் பலமான அடித்தளத்தை கொண்ட, மாநிலம் தழுவிய யாதவர் பேரவையில் யாதவர்கள் அனைவரும் இணைந்து ஸ்ரீ கிருஷ்ணா பகவானின் கீதையின் சொல்படி “**கடமையை செய் பலனை எதிர்பாராதே**” என்ற கூற்றுக்கு இணங்க இணைந்து செயல்பட யாதவர்களாகிய உங்களை இரு கரம் கூப்பி பேரவையில் இணைந்து செயல்பட அழைக்கிறோம்

வாரீர்!!!!
நன்றி!!!!



**Founder**
**இரா. காந்தையா யாதவ்.**

## யாவரும் போற்றத்தக்க யாதவ மாமேதை.

புதுக்கோட்டை மாவட்டம் முள்ளூரில் வேளாண் குடும்பத்தைச் சேர்ந்த ஐயா கலிய மூர்த்தி கோனார்- மங்கலத்தம்மாள் தம்பதியருக்கு 4/12/1912 அன்று மகனாகப் பிறந்தார் மருத்துவ மாமேதை ஐயா V.K.ராமச்சந்திரன் அவர்கள். புதுக்கோட்டை நகரில் அதன்ச் சுற்றுப்புறங்களில் உள்ள நோயாளிகளுக்கு கண்கண்ட தெய்வமாக விளங்கியவர் மருத்துவர் வி.கே.ராமச்சந்திரன் டாக்டர்களுக்கே மருத்துவத்தைக் கற்பித்த மனிதநேய மாமனிதர்.

இவரது மருத்துவமனை புதுக்கோட்டை நகரில் மிகவும் பிரபலமானது. இவர் நோயாளிகளுக்கு இலவசமாகவே மருத்துவம் செய்து தனது மனித நேயத்தைக் காத்தவர். V.K.ராமச்சந்திரனை எப்படியேனும் டாக்டராக வேண்டும் என்று அவரது குடும்பத்தினர்கள் ஆசைப்பட்டனர்.அவரது தாயார் சிறுவயதிலேயே இறந்து விட்டார். இராமச்சந்திரனின் தாயாரின் சகோதரர் தியாகராஜன் என்பவர் தனது மருமகனை அவரது அண்ணன் சுப்பிரமணியத்திடம் ஒப்படைத்தார்.

வி.கே.இராமச்சந்திரன் திண்ணைப் பள்ளிக்கூடத்தில் தனது தொடக்கக் கல்வியைக் கற்றார்.பின்னர் முதல்பாரம் முதல் பதினொன்றாம் வகுப்பு வரை பிரெஞ்சு காலேஜ் என அழைக்கப்படும் பிரகதாம்பாள் மேல்நிலைப் பள்ளியில் கல்வி கற்றார்.

பின்னர் மன்னர் கல்லூரியில் இன்டர்மீடியட் படிப்பையும் படித்தார். அதன் பின்னர் அவரது தாயாரின் விருப்பமாக இருந்த மருத்துவப் படிப்பை சென்னை மருத்துவக் கல்லூரியில் இணைந்து கற்று மருத்துவராகத் தேர்வு பெற்றார். தான் பிறந்து வளர்ந்த புதுக்கோட்டை மக்களுக்கு சேவை செய்ய வேண்டும் என்ற எண்ணத்தோடு தனது வாழ்க்கையை அர்ப்பணிக்கத் தீர்மானித்தார்.

இவர் மருத்துவராகப் பணி புரிய வருகிற நேரம் புதுக்கோட்டை சமஸ்தானத்தின் சார்பாக மருத்துவமனை ஒன்று ஏற்படுத்தப்பட்டது. அதில் மருத்துவர் பணிபுரிய வேண்டும் என்று சமஸ்தானத்தின் சார்பில் அழைப்பு விடுக்கப்பட்டது.அதனை ஏற்றுக்கொண்ட அவர் அங்கு சேர்ந்து பணிபுரிந்து வந்தார்.



மருத்துவர் சிறிது காலத்திலேயே உயர்கல்வி படிக்க வேண்டுமென்று அவரது ஆவலாக இருந்தது. எனவே சென்னை பல்கலைக்கழகத்தில் மருத்துவ முதுகலை பட்டப்படிப்பில் இணைந்து M,D.பட்டம் கற்றார்.அதில் சென்னை மாகாணத்திலேயே முதல் மாணவனாக தங்கப் பதக்கத்துடன் தேர்ச்சிபெற்று சென்னை தவிர்த்த தமிழ்நாட்டின் பிற பகுதிகளில் எம்டி படித்த முதல் டாக்டர் என்று புகழைப் பெற்றார்

**தொடரும்...**

# பொருளாதார இடஒதுக்கீடு

இங்கர்சால் நார்வே

தமிழர் ஆய்வுக் கூடம்

**TAMIL RESEARCH INSTITUTE**

**TAMILRI.COM**

## இடஒதுக்கீடு என்பது மூன்று வகைப்படும்:

- அரசியலில் இடஒதுக்கீடு (தனித் தொகுதிகள்)
- வேலைவாய்ப்பில் இடஒதுக்கீடு மற்றும்,
- கல்வியில் இடஒதுக்கீடு

## இடஒதுக்கீடு ஏன்?

மக்கள் குடிகளாக பிரிந்து இருந்ததனால் அதிகாரம் சில குடிகளுக்கு மட்டுமே சென்றிருந்தது.அதிகாரம் என்பது அனைவருக்கும் பொதுவாக இருக்க வேண்டும் . அந்த அதிகாரத்தை பகிர அனைவரும் ஆட்சியில், நிர்வாகத்தில் சமுதாய பொறுப்புகளில் பங்கு பெற வேண்டும்.அந்த இடத்திற்கு வர அவர்களுக்கு கல்வி கொடுக்கப்பட்டிருக்க வேண்டும். அதனால் தான் மூன்றாவதாக கூறப்பட்டுள்ள கல்வி இட ஒதுக்கீட்டில் முதன்மையானதாக கருதப்படுகிறது.

## தமிழகத்தில் உள்ள 69 சதவீத இடஒதுக்கீடு

இந்தியாவிலே இடஒதுக்கீடு அதிகமாக செயல்படுத்தப்பட்டுள்ளது தமிழ்நாட்டில் தான். தமிழ்நாட்டில் கல்வி மற்றும் அரசு வேலை வாய்ப்புகளில் பொதுப் பிரிவினருக்கு (OC) 31%ம், பிற்படுத்தப்பட்ட பிரிவினருக்கு (BC) 26.5%ம், பிற்படுத்த இசுலாமியருக்கு (BCM) 3.5% இடஒதுக்கீடும், மிகவும் பிற்படுத்தப்பட்ட பிரிவினருக்கு (MBC) 20%ம், பட்டியல் சாதியினருக்கு (SC) 15%ம், பட்டியல் சாதிகளில் ஒன்றான அருந்ததியருக்கு (SCA) 3% உள் இடஒதுக்கீடும்,பட்டியல் பழங்குடியினருக்கு (ST) 1% இடஒதுக்கீடும் வழங்கப்பட்டுள்ளது. இப்பொழுது இதனை முற்றிலும் தகர்க்கும் வண்ணம் மத்திய அரசு புதிய மசோதா ஒன்றை நிறைவேற்றியுள்ளது.



## இந்திய அரசியலமைப்பில் 103–வது சட்ட திருத்த மசோதா

## The Constitutional (103rd amendment) Bill 165.

பெரும் ஆதரவில், பொருளாதாரத்தில் பின் தங்கிய பொதுப்பிரிவினருக்கு இடஒதுக்கீடு தரும் இந்த மசோதா, மக்களவையில் நிறைவேற்றம் செய்து முதல் அமலுக்கு வந்தது.மத்திய சமூக நலத்துறை அமைச்சகம் சார்பாக அரசாணை வெளியிடப்பட்டும் விட்டது.

இந்த மசோதா லோக் சபா, ராஜ்ய சபா இரண்டிலும் வெற்றி பெற்று, சட்டமாகி உள்ளது. இதற்கு மக்களவையில் 323 நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவு இருந்தது. மூன்று சட்டமன்ற உறுப்பினர்கள் அதற்கு எதிராக இருந்தனர். தமிழக ஆளும் கட்சி அதிமுக வாக்கெடுப்பில் பங்கெடுக்காமல் மக்களவையில் இருந்து வெளிநடப்பு செய்திருந்தது.

இந்த சட்ட திருத்த மசோதா முதன் முறையாக முற்பட்ட பிரிவினருக்கு இடஒதுக்கீடு அளிக்கும் வகையில் அமைந்துள்ளது.இதுவரை இடஒதுக்கீட்டின் பயன்களைப் பெறாத, முன்னேறிய வகுப்புகளை சேர்ந்தவர்களில் பொருளாதார ரீதியாக பின்தங்கியவர்களுக்கு,இதன் மூலம் வேலைவாய்ப்பு மற்றும் கல்வியில் 10% இடஒதுக்கீடு அளிக்கப்பட உள்ளது.

ஐந்து ஏக்கருக்கும் குறைவாக வேளாண் நிலம் வைத்தியிருப்பவர்கள், ஆயிரம் சதுர அடிக்கு கீழ் வீடு வைத்திருப்பவர்கள், வருடம் 8 லட்சத்திற்கும் குறைவாக சம்பளம் பெறக்கூடிய உயர் சாதியினர் இதன் மூலம் பயன் பெறுவார்கள். இந்த இடஒதுக்கீட்டைப் பெறாத தகுதியானவர்களாக இருப்பார்கள் என்று அந்த மசோதா கூறுகிறது.யாருடைய அதிகாரத்தை பங்கிட இந்த இடஒதுக்கீடு கொண்டுவரப்பட்டதோ, அந்த அதிகரம்படைத்த வர்க்கத்திற்கே 10 சதவீத இடஒதுக்கீடு கொடுக்கப்பட்டுள்ளது.

### மத்திய அரசு இயற்றவிருக்கும் படி புதிய இடஒதுக்கீடு சட்டத்தின்பாடு பயன் பெறுவோர் யார்? யார்?

ஐந்து ஏக்கர் நிலத்துக்கு கீழே நிலம் வைத்துள்ள குடும்பம் 1000 சதுர அடிக்கு குறைவான அளவுடைய வீடு கொண்டிருக்கும் குடும்பம். ஒரு நாளைக்கு 2222 ரூபாய்க்கு கீழே சம்பாதிக்கும் குடும்பம் அதாவது 8 லட்சத்துக்கும் குறைவான வருட வருமானம் உள்ள குடும்பம். உயர்சாதி FC என்ற ஒற்றை காரணத்தினால் ஏழை என்று கருதப்படுவார்கள்.

இந்திய அரசின் இந்த பொருளாதார இடஒதுக்கீட்டின் கணக்கின்படி, இந்திய மக்கள் தொகையில் 95% அதாவது 125 கோடி பேர் ஏழை.மாதம் ரூ.60 ஆயிரம் சம்பளம் வாங்குபவரும் ஏழை, மாதம் ரூ.6000 வருமானம் உள்ளவரும் ஏழை என்று வரையறுக்கிறது.அதன்படி ஏற்கனவே அரசு வகுத்த வருமான வரி சட்டத்திற்கான உச்ச வரம்பிற்கும் இதற்கும் கொஞ்சம் கூட தொடர்பு கிடையாது.

தமிழகத்தில் முற்பட்ட வகுப்பினர் (FORWARD CASTE) என வகைப்படுத்தப்பட்ட முக்கிய சாதிகளின் பட்டியல்இது. பிராமணர், நாயுடு, நாயக்கர், ரெட்டியார், செட்டியார், வெள்ளாளர், முதலியார், ஆச்சரி, பட்டானி, நவாப்

**தொடரும்…**

# Know about RTI Act

**சென்றஇதழ் தொடர்ச்சி**

தமிழ்நாடு மாநில தகவல் ஆணையத்தின் இனையதளத்தில் கட்டணம் பற்றி தெரிவிக்கப்பட்டுள்ள விபரம் வருமாறு 2005 ஆம் ஆண்டு தகவல் பெறும் உரிமைச்சட்டத்தின் 27(1) ஆம் பிரிவின்படி உரிய அரசாங்கமானது, அரசிதழில் அறிவிக்கை வெளியிடுவதன்மூலம் இச்சட்டத்தின் வகைமுறைகளை நிறைவேற்றுவதற்கான விதிகளை இயற்றலாம். 07.10.2005 ஆம் நாளிட்ட பொது (பணியாளரமைப்பு 1 மற்றும் சட்டமியற்றுதல்) துறையின் 989 ஆம் நிலை எண் அரசாணையில், விண்ணப்பக் கட்டணம், ஆவண நகல்களுக்கான கட்டணம், கட்டணம் செலுத்தும் முறை ஆகியவற்றை நிர்ணயித்து, 2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு தகவல் பெறும் உரிமை (கட்டணங்கள்) விதிகள் குறித்த அறிவிக்கை வெளியிடப்பட்டது. அதன் பின்னர் 20.09.2006 ஆம் நாளிட்ட பொது (பணியாளரமைப்பு 1 மற்றும் சட்டமியற்றுதல்) துறையின் 1012 ஆம் நிலை எண் அரசாணை மற்றும் 20.03.2007 ஆம் நாளிட்ட பணியாளர் மற்றும் நிருவாக சீர்திருத்தத் (நி.சீ.3) துறையின் 72 ஆம் நிலை எண் அரசாணையிலும், தமிழ்நாடு தகவல் பெறும் உரிமை (கட்டணங்கள்) விதிகளில் சில திருத்தங்கள் வெளியிடப்பட்டன

2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு தகவல் பெறும் உரிமை (கட்டணங்கள்) விதிகளின் சிறப்பியல்புகள் கீழ் வருமாறு:-

(அ) இச்சட்டத்தின் 6ஆம் பிரிவின் (1) உட்பிரிவின் கீழ் தகவல் பெறுவதற்கென ஒவ்வொரு விண்ணப்பத்துடன் விண்ணப்பக் கட்டணமாக ரூபாய் 10/- ரொக்கமாகவோ அல்லது நீதிமன்ற கட்டண வில்லையாகவோ அல்லது கேட்பு வரைவோலையாகவோ, அல்லது வங்கி காசோலையாகவோ இணைக்கப்பட்டிருக்க வேண்டும்.

(ஆ) இச்சட்டத்தின் 7 ஆம் பிரிவின் (1) உட்பிரிவின் கீழ் தகவல் அளிப்பதற்கு, பின்வரும் வீதங்களில் உரிய ரசீதின் பேரில் ரொக்கமாக அல்லது கேட்பு வரைவோலை அல்லது வங்கி காசோலை வாயிலாக கட்டணம் வசூலிக்கப்படும்.

(i) உருவாக்கப்பட்ட அல்லது நகலெடுக்கப்பட்ட ஒவ்வொரு பக்கத்திற்கும் ரூ2/- ( A-4 அல்லது A-3 அளவு தாள் )

(ii) பெரியளவிலான தாளின் நகலுக்கான உண்மையான கட்டணத்தொகை அல்லது செலவுத்தொகை,

(iii) மாதிரிகளுக்கு அல்லது மாடல்களுக்கு ஏற்பட்ட செலவு அல்லது அடக்கவிலை.

(iv) பதிவுருக்களை ஆய்வு செய்வதற்கு, முதல் ஒரு மணி நேரத்திற்கு கட்டணம் ஏதுமில்லை. அதன் பின்னர் வரும் ஒவ்வொரு மணி நேரத்திற்கும் (அல்லது அதன் ஒரு பகுதிக்கும்) கட்டணம் ரூ.5/-

(இ) 7 ஆம் பிரிவைச் சேர்ந்த (5) உட்பிரிவின் கீழ் தகவல் வழங்குவதற்கு (அதாவது அச்சிடப்பட்ட அல்லது யாதொரு மின்னணு படிவத்தில்) உரிய ரசீதின் பேரில் ரொக்கமாக அல்லது கேட்பு வரைவோலை அல்லது வங்கி காசோலை வாயிலாக பின்வரும் வீதங்களில் கட்டணம் வசூலிக்கப்படும்:-

(1) செருகு வட்டு அல்லது நெகிழ்வட்டில் தகவல் வழங்குவதற்கு செருகு வட்டு அல்லது நெகிழ்வட்டு ஒன்றுக்கு ரூ50/- மற்றும்

(2) அச்சிடப்பட்ட வடிவில் தகவல் வழங்குவதற்கு வெளியீட்டிற்கு நிர்ணயிக்கப்பட்ட விலை அல்லது வெளியீட்டின் பகுதிநகலுக்கான ஒளிநகலின் பக்கம் ஒன்றுக்கு ரூ.2/-

(ஈ) 2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு தகவல் பெறும் உரிமை (கட்டணங்கள்) விதிகளின் கீழ் வசூலிக்கப்படவேண்டிய கட்டணத்தொகையானது, பின்வரும் கணக்குத் தலைப்பின் கீழ் செலுத்தப்படவேண்டும். 0075-00- பல்வகை பொதுப்பணிகள் பல்வகை பொதுப்பணிகள் -800 ஏனைய வரவுகள் - கூஷமு தமிழ்நாடு 2005 ஆம் ஆண்டு தகவல் பெறும் உரிமை (கட்டணங்கள்) விதிகளின் கீழ் கட்டணங்கள் வசூலித்தல் "" (த.தொ.கு0075 00 800 கூஷமு 0006)

(உ) 2005 ஆம்ஆண்டு தகவல் பெறும் உரிமைச்சட்டத்தின் கீழ் தகவல் கோருபவருக்கு செலுத்தப்பட்ட கட்டணத் தொகையை திரும்பக் கொடுப்பதற்கான கணக்குத்தலைப்பு பின்வருமாறு:- ""0075-00 - பல்வகை பொதுப்பணிகள் - 900 திருப்பி அளிக்கப்பட்ட 900 திருப்பி அளிக்கப்பட்ட தொகையை கழிக்கவும் - ஹநு. 2005ஆம் ஆண்டு தகவல் பெறும் உரிமை சட்டத்தின் கீழ் கட்டணத்தை திருப்பி அளித்தல்"" சட்டத்தின் கீழ் கட்டணத்தை திருப்பி அளித்தல்"" (த.தொ.கு0075 00 900 ஹநு 0005) 19

(ஊ) விண்ணப்பக்கட்டணம் உட்பட யாதொரு வரையறுக்கப்பட்ட கட்டணமும், வறுமை கோட்டிற்குக் கீழ் வாழ்கின்ற மக்களிடமிருந்து வசூலிக்கப்படமாட்டாது.

(எ) கிராம ஊராட்சி மற்றும் உள்ளாட்சி அமைப்புகளால் ஒப்பளித்தவாறான வறுமைக் கோட்டிற்குக் கீழேயுள்ள நபர்களின் வகைப்பாடு, கட்டணம் செலுத்துவதிலிருந்து அவர்களுக்கு விலக்களிக்கும் செயல் நோக்கத்திற்காக, வறுமை கோட்டிற்கு கீழேயுள்ள நபர்களை கண்டறிவதற்கு அடிப்படையாக எடுத்துக்கொள்ளப்படவேண்டும் என்று தமிழக அரசு பொதுப் (பணியாளரமைப்பு 1 மற்றும் சட்டமியற்றுதல்) துறையின் 14.11.2005 ஆம் நாளிட்ட 1138-ஆம் நிலை எண் அரசாணையில் ஆணையிட்டுள்ளது. உரியவாறு சான்றளிக்கப்பட்ட பகுதிநகல் ஒன்று, இந்த சலுகையை பெறுவதற்கு போதுமானதாகும்.

## RTI & Legal Awareness...

தகவல் பெறும் உரிமைச்சட்டத்தின் 5 முறையீடுகள்
I. தகவல் கோரும் விண்ணப்பம் - காலவரையறை 30 நாட்கள்
தகவல் கோரும் விண்ணப்பம் பிரிவு 6 (1) APPLICATION
அனுப்புநர் - உங்கள் முகவரி
பெறுநர் - தகவல் பெற விரும்பும் பொது அதிகார அமைப்பின் முகவரி
(பொது தகவல் அலுவலர், அலுவலக முகவரி, மாவட்டம்.)

**உதாரணம்**
பொது தகவல் அலுவலர்,
வட்டாட்சியர் அலுவலகம், தூத்துக்குடி.

**தொடரும்**



## இரண்டிற்கும் வித்தியாசம், வயது மட்டுமே



35 வருடங்களுக்கு முன்னால் பள்ளிப் பருவத்தில், எனது ஆசிரியர் என்னிடம் ஒரு கேள்வி கேட்டார்...... கிருஷ்ணருக்கும், கண்ணனுக்கும், என்ன வித்தியாசம் என்று..., அதற்கு, நான் சொன்ன பதில்...,.இரண்டிற்கும்... வயதுதான் வித்தியாசம் என்றேன்..... கண்ணன் என்பது செல்ல பெயர். குழந்தை பருவம்.

கிருஷ்ணன் என்பது வளர்ந்த பிள்ளை. இரண்டிற்கும் , வயதுதானே வித்தியாசம் சின்ன உதாரணம்... ஒருநாள், நான் ... முகம் முழுக்க சோப்பு தேய்த்து , குளித்துக் கொண்டிருந்தேன். திடீர் என்று , பக்கத்தில் வைத்திருந்த தண்ணீர் சொம்பை காணவில்லை. கண்ணை திறக்க முடியாமல், இரண்டு கையாலும், என்னை சுற்றி , சுற்றி, சொம்பை, தேடினேன்.

அல்போது ,..எனது குழந்தை சிரிக்கும் சப்தம் கேட்டது. எனக்கு புரிந்து விட்டது. சொம்பை அவள் தான் வைத்திருக்கிறாள் என்று. எனக்கு , கண் எரிகிறது என்று அவளுக்கு தெரியவில்லை. நான் , சொம்பை தேடுவதில், அவளுக்கு ஒரு ஆனந்தம். இதுதான்.... குழந்தையின் குறும்பு. என்பது.

தற்போது , எனது கண்ணில் ஒரு தூசி விழுந்தாலும் அவள் கண்ணில் நீர் வடிகிறது. இரண்டிற்கும் , வித்தியாசம் வயது மட்டுமே.... மகாபாரதத்தில், கண்ணன் சிறு குழந்தையாக இருக்கும் போது.... கோபிகளின் ஆடைகளை , மறைத்து வைத்து... அவர்கள் தேடுவதை கண்டு ஆனந்தப் பட்டான். அதே கண்ணன் கிருஷ்ணனாக மாறும் போது.... மேலாடை இன்றி ஒரு பெண் தவிக்கும்போது... மேலாடையை அவளுக்கு கொடுத்து, அவள் மனதை, காத்து நின்றான்..

இரண்டிற்கும் வித்தியாசம் ,வயது மட்டுமே..... கண்ணன் சிறு பிள்ளையாக இருக்கும்போது.... நண்பர்களுடன் , பக்கத்து வீட்டில் வெண்ணெயைத் திருடித் தின்றான். தாய் கேட்கும் போது... நான் திருடவே இல்லை என , பொய்யும் சொன்னான்... அதே கண்ணன் கிருஷ்ணனாக மாறும் போது.... திருடுவது கூடாது.... பொய் சொல்வது கூடாது , என கீதை உபதேசம் செய்தார்.... இரண்டுக்கும் வித்தியாசம் வயது மட்டுமே. அருமையான கருத்துக்கள் செறிந்த பதிவு.

**சர்வம் கிருஷ்ணார்ப்பணம்..**

## ஒரு கார் விபத்தும், இரு மரணங்களும், ஒரு Post Mortem.

## Importance of Wearing Car rear seat Belt

**சென்றஇதழ் தொடர்ச்சி**

விபத்தில் கார் மோதும் கோணத்தைப் பொருத்து, அவர்கள் காரின் முன் இருக்கையின் பின்பகுதி, காரின் முன் இருக்கையில் அமர்ந்திருப்பவர்களின் மேல், காரின் முன் கண்ணாடியின் மேல், காரின் மேல்பகுதி எனப் பல இடங்களுக்குத் தூக்கி வீசப்படும் வாய்ப்பு மிக மிக அதிகம்.. அதுவும் kinetic energy உடன், அவர்களுடைய உடல் எடையால் உருவாகும் potential energy யும் உடன், சேர்ந்து கொள்ள, அவர்கள் மோதும் வேகத்தின் எடை பல நூற்றுக்கணக்கான கிலோவாக இருக்கும்.. அதனால் அவர்களுடைய உடலின் பல பாகங்களிலும் மிகப் பலத்த படு காயங்களும், multiple fracture என்று சொல்லக் கூடிய பல எலும்பு முறிவுகளும் ஏற்பட வாய்ப்பு மிக மிக அதிகம்.. அதனால் உயிரிழப்பு ஏற்படும் வாய்ப்பும் அதிகம். இந்த விபத்தில், காரில் பின்னிருக்கையில் அமர்ந்தவர்கள் மோதியதில், முன்னிருக்கையில் இருந்த adjustable head rest என்று சொல்லக் கூடிய, இருக்கையின் தலைப் பகுதி உடைந்து தெரித்துத் தனியே விழுந்து விட்டது... கடினமான இருக்கையே அந்த பலமான அடியில் தெரித்து விழுந்திருக்கிறது என்றால், வெறும் எலும்பும் சதையும் கொண்டு உருவான மனிதனின் உடம்பு எம்மாத்திரம் ? கோடீஸ்வரரான சைரஸ் மிஸ்திரியின் உயிரற்ற உடலும், ஜஹாங்கிர் பண்டோலேயின் உடலும், சாலை ஓரத்தில் இருந்த சேறு நிறைந்த புல் தரையின் மேல் கேட்பாரற்று அனாதையாகக் கிடந்திருந்ததைப் பார்த்த போது மனசுக்கு மிகவும் வருத்தமாகத்தான் இருந்தது. பதிவின் இறுதியாக, போஸ்ட் மார்ட்டத்தின் முடிவாக, நாம் அனைவரும் உணர வேண்டிய விசயங்கள் என நான் நினைக்கும் சிலவற்றைக் கீழே சுருக்கமாகத் தருகிறேன்...

1) எவ்வளவுதான் பாதுகாப்பு அம்சங்கள் நிறைந்த காராக இருந்தாலும், அது இரும்பு எஃகால் தயாரிக்கப்பட்டதாக இருந்தாலும் கூட, நம்முடைய பாதுகாப்பு நம்மிடம் மட்டுமே இருக்கிறது... அது, அளவான வேகத்தில், நிதானமாக வண்டியை ஓட்டுவது மட்டுமே.

2) காரில் பயணிக்கும் அனைவருமே தவறாமல் சீட் பெல்ட் அணிவது நிச்சயம் உயிரைக் காக்கும்.

3) சாலை விதிகளை, குறிப்பாக லேன் ஒழுக்கத்தை, ஒவ்வொரு வாகன ஓட்டியும் தவறாமல் கடைப்பிடித்தே ஆக வேண்டும்.

4) எந்த வாகனத்தையும், அதனுடைய இடது புறத்தில் ஓவர் டேக் செய்யாமல், வலது புறத்தில் மட்டுமே ஓவர் டேக் செய்வது மட்டுமே பாதுகாப்பானது.

இன்னும் இது போல உங்களுக்குத் தோன்றக் கூடிய விசயங்கள் எதுவாகினும், உங்களுடைய கமெண்டுகளில் தெரியப்படுத்துங்கள். நானும் அவற்றை அறிந்து கொள்கிறேன்.

**முற்றும்....**



# பொன்னியின் செல்வன் தவறுகள்

“துவராகா”வில் இருந்து **சித்தர் அகஸ்தியர்** தலைமையில் தென்பாரதம் வந்த யாதவர்கள் **வேளிர்** என அழைக்கப்பட்டனர்

வேளிர் மன்னர்கள் தங்கள் பெயரோடு **வேள்ஆய், ஆய்வேள்** என பயன்படுத்தி கொண்டனர்

**பூதிவிக்ரமகேசரி** (கொடும்பாளூர் வேளிர்), முல்லைக்கு தேர்கொடுத்த பாரி, ஆய் அண்டிரன், பேகன் இவர்களெல்லாம் வேளிர் மன்னர்கள்.

ஆனால் கொடும்பாளூர் **வேளிர்மன்னரை**, வேளாளர் என்றும் வேளார் என்றும் தவறுதலாக எழுதி வருகின்றனர்.

**பொன்னியின் செல்வன்** திரைப்படத்திலும் இதே தவறை செய்துள்ளனர்.

காலங்காலமாக மறைக்கப்படுவதும், திரிக்கப்படுவதும், யாதவர்களின் வரலாறாகவே உள்ளது.



# திருமால் அவதாரங்கள்

மக்களைக் காக்கும் பொருட்டு திருமால் எடுத்த 24 அவதாரங்களில் மிக முக்கியமான பத்து அவதாரங்களை தசாவதாரங்கள் என்று போற்றுகிறோம். மத்ஸ்ய, கூர்ம, வராக, நரசிம்ம, வாமன, பரசுராம, ராம, பலராம, கிருஷ்ண மற்றும் கல்கி அவதாரங்கள் தசாவதாரங்களாகும்.

இவற்றைத் தவிர, தத்தாத்ரேயர், வியாசர், கபிலர், தன்வந்திரி போன்ற வேறு பல அவதாரங்களையும் திருமால் எடுத்துள்ளார். ஸ்ரீதன்வந்திரி பகவான் அவதாரம் பற்றி ஸ்ரீமத் பாகவதம், ஸ்ரீ விஷ்ணுபுராணம் மற்றும் பிரம்மாண்ட புராணத் தில் குறிப்புகள் உள்ளன.

திருப்பாற்கடலில் தேவர்களும், அசுரர்களும் அமுதம் கடைந்தபோது கடலில் இருந்து பல்வேறு பொருட்களும், பல தெய்வங்களும் வெளிவந்தன. அப்போது அண்டமே பிரமிக்கும் வண்ணம் ஜோதி ஒன்று எழுந்தது.அந்த ஜோதியில் பிறந்த மகாபுருஷர் தான் தன்வந்திரி. கற்பனைக்கு எட்டாத அழகுடன், திருக்கரங்களில் சங்கு,சக்கரம், அட்டைப்பூச்சி, அமிர்தகலசம் ஆகியவற்றை ஏந்தி நின்றார். அவர் தான் தன்வந்திரி என்ற தெய்வீக மருத்துவர். நோய் தீர வழிபடலாம் நோயின்றி வாழ வேண்டும் என்பதே பலரது விருப்பம். பணம், சொத்து இருந்தாலும் அதை அனுபவிக்க ஆரோக்கியமான உடல் வேண்டும். நிம்மதியான மனம் வேண்டும்.

இப்பூவுலகில் விஷ்ணு எடுத்த அவதாரங்களில் ஒன்றாக கருதப்படும் தன்வந்திரி பகவான் நோய் தீர்க்கும் தெய்வமாக போற்றப்படுகிறார். இவரை வழிபடுவதால் நோய்கள் தீரும். மருத்துவ கடவுள் தன்வந்திரி ஆயுர்வேத மருந்துகளின் அதிபதி. மருத்துவக்கலையின் முதல்வரான இவரை வேண்டியே தேவர்கள் அமர வாழ்வைப் பெற்றனர்.

மனிதர்களுக்கு நோய் நொடிகள் அவரவர் கர்மவினைப்படி வந்துதான் தீரும். இதிலிருந்து நம்மை தன்வந்திரி வழிபாடு ஒன்றே காப்பாற்றவல்லது. இவரை வழிபட்டால் நோய்நொடிகள் நீங்குவதோடு ஆரோக்கியமும் உண்டாகும். ஸ்ரீரங்கம் நம்பெருமாள் ஆலயத்தில் உள்ள தாயார் சன்னிதிக்கு செல்லும் வழியில் தன்வந்திரி பகவான் சன்னிதி உள்ளது. இத்தலத்தில் அருள்பாலிக்கும் அரங்கனுக்கே வைத்தியம் செய்யும் விதமாக, ஸ்ரீமன் நாராயணனே இங்கு தன்வந்திரியாக திகழ்வதாக கூறப்படுகிறது.



**சர்வம் கிருஷ்ணார்ப்பணம்**



தலைமை நிலையச் செயலாளர்/பொருளாளர்
அலுவலக நிர்வாகச் செலவு கணக்குகள்.

**November to December 2022**
**HQ.Sec Mr. Kothandaraman Yadav, Cell: 94440 50110**
**Treasurer Mr. Jaikumar Yadav , Cell:93810 63565**



HQ.Secretary

Treasurer

## Receipts

| S.No | Name | Receipt Book No. | Receipt Voucher No | Amount | Date | Payment |
|---|---|---|---|---|---|---|
| **1** | Mrs. Nivetha Balakumar Yadav | 95 | 4722 | 5000 | 24/11/2022 | YP |
| **2** | Mr. Kothandaraman Yadav | 95 | 4723 | 10000 | 24/11/2022 | YP |
| **3** | Dr. Kanthaiah Yadav | 95 | 4724 | 20000 | 24/11/2022 | YP |
| **4** | Mr. S. Gunasekaran | 3 | 263 | 120 | 08/11/2022 | OYM |
| **5** | Mr. N. Srinivasanarasimhan | 3 | 264 | 120 | 12/11/2022 | OYM |
| **6** | Mr. Kothandaraman Yadav | 13 | 602 | 5000 | /2022 | YPWT |

**YPWT:** Yadhavar Peravai Welfare Trust
**OYM:** Olikum Yadavar Murasu

**YP:** Yadhavar Peravai
**E:** Education
**C:** Corpus Fund

## Expenses

| S.No | Head of Accounts | Amount |
|---|---|---|
| 1. | Postage | 1,200 |
| 2. | Stationery | - |
| 3 | Salary | 12,000 |
| 4. | Mr. Madhanagopal Yadav | 3,500 |
| 5. | YB Electricity Bill | 4,714 |
| 6. | Other Expenses | 100 |

# ஆளுமைமிக்கஆயர்கள்

தமிழ்நாடு இயல் இசை நாடக மன்ற உறுப்பினர் - செயலாளர் பேராசிரியர் முனைவர் மு.இராமசாமி ஐயா அவர்களுக்கு நெஞ்சார்ந்த இனிய பிறந்த நாள் நல்வாழ்த்துக்கள்..!! முனைவர் ஐயா மு.இராமசாமி அவர்கள். திருநெல்வேலி மாவட்டம், பாளையம்கோட்டையில் டிசம்பர் 4, 1951ம் ஆண்டு திரு முருகையா கோனாருக்கு மகனாக பிறந்தார் மு.இராமசாமி அவர்கள். திரு.வி.க உயிர்நிலை பள்ளியில் பள்ளிப்படிப்பை முடித்தார்...! பாளையம்கோட்டையில் சேவியர் கல்லூரியில் B.Sc பட்டம் பெற்றார்... மதுரை பல்கலைக்கழகத்தில் தோற்பாவை, நிழற் கூத்து எனும் கலையில் ஆய்வு செய்து முனைவர் பட்டம் பெற்றார்...! திரு இராமசாமி அவர்கள், தமிழ் பேராசிரியர் செண்பகம் அவர்களை திருமணம் செய்து கொண்டார்...! திரு இராமசாமி... செண்பகம் தம்பதியினருக்கு அபு என்கிற மகன் இருக்கிறார்...

மதுரை பல்கலைக்கழகம், தஞ்சை தமிழ் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராக பணி புரிந்தார்...!! 40 ஆண்டுகளாகத் தமிழ் நாடகவெளியில் தீவிரமான இயக்கம்கொண்டவர் மு.ராமசாமி. பேராசிரியர், நாடகக் கலைஞர், எழுத்தாளர், சினிமா ஆர்வலர் எனப் பன்முகம்கொண்ட ஆளுமை. அவரது 'நிஜ நாடக இயக்கம்' இந்திய அளவில் கவனம்பெற்ற ஒன்று...!!! "முரண்தான் நாடகம், மீறல்தான் கலை!" -மு.ராமசாமி கலைகள், சமூகத்தை விழிப்போடு வைத்திருப்பதற்கான கருவிகள் என நம்பும் மு.ராமசாமியின் 'தோற்பாவை நிழற்கூத்து' பற்றிய ஆய்வு, நாட்டார் ஆய்வுத் தளத்தில் முக்கியத்துவம் வாய்ந்தது. "பாளையங்கோட்டை அந்தோணியார் பள்ளியில் மூன்றாம் வகுப்பு படித்துக்கொண்டிருந்த போது பள்ளி விழாவில் நடத்தப்பட்ட ஒரு நாடகத்தில், அலெக்ஸாண்டரை எதிர்த்துப் போரிட்ட புருஷோத்தமனின் மந்திரி பாத்திரத்தில் நடித்தார்!!



பேராசிரியர் முனைவர் மு. ராமசாமி ஐயா அவர்கள்.

புருஷோத்தமனாக நடித்தவர் கோபால் எனும் பையன வசனம் பேசாததால் ஆசிரியர், 'ராமசாமியைப் புருஷோத்தமனாக நடிக்கவைத்துவிடுவேன்' என்று சொன்னதும், 'என் பாத்திரத்தில் நீ நடித்தால் எங்கள் தெருவைக் கடந்து நீ போக முடியாது' என்று வீட்டுக்குச் செல்லும் வழியில் இராமசாமி அவர்களை அவர் மிரட்டினார்..! விஷயத்தை ஆசிரியரிடம் இராமசாமி அவர்கள் சொல்லிவிட, அவருக்கு முறையான 'கவனிப்பு' கிடைத்தது. ஒருவழியாக முதலிலேயே தீர்மானிக்கப்பட்டதுபோல அவரவர் பாத்திரத்திலேயே போட்டிபோட்டு நடித்தார்கள்..!! அதுதான் திரு இராமசாமி அவர்களது முதல் நடிப்பு அனுபவம்."

சினிமாத் துறையில்.... இயக்குனர் பாலா, அமீர், மணிரத்னம், லிங்குசாமி போன்ற ஜாம்பவான்களோடு சேர்ந்து பணியாற்றினார்..!! (கன்னத்தில் முத்தமிட்டால், பிதாமகன், சண்டைக்கோழி, பருத்தி வீரன்) தமிழ்நாடு இயல் இசை நாடக மன்ற உறுப்பினர் - செயலராக நியமிக்கப்பட்டுள்ள பேராசிரியர் முனைவர் மு.இராமசாமி ஐயா அவர்களுக்கு பிறந்த நாள்....!! இனிய பிறந்த நாள் வாழ்த்துகள்...! நெஞ்சார்ந்த நல்வாழ்த்துக்கள்..!!

திருநெல்வேலி மாவட்டத்தில் சமுதாயம் மற்றும் அரசியல் ரீதியாக இரண்டு நாட்களாக சுற்றுப்பயணம் மேற்கொண்டு வருகிறேன்... நெல்லை வந்துவிட்டு நெல்லையப்பரை தரிசிக்காமல் சென்றால் சரியாக இருக்காது... அதுவும், நெல்லையப்பரை கண்டெடுத்தவர் ராம கோனார் என்கிற வரலாறு செய்தியும் நமக்கு எப்பொழுதும் மகிழ்ச்சி அளிக்கும்.

நெல்லையப்பர் ஆலயத்தில் உள்ள ராமகோணாரின் திருவுருவச் சிலையை வணங்கினேன். நெல்லையப்பர் அருள் அனைவருக்கும் கிடைக்க வேண்டினேன்...நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டிய ஒரு சின்ன வரலாற்றுச் செய்தி இத்துடன் இணைத்து இருக்கிறேன்...

முன்பொரு காலத்தில் அரண்மனைக்குப் பால் ஊற்றிக் கொண்டிருந்தாராம் ராமகோனர். அப்படி ஒருநாள் அவர் சென்று கொண்டிருக்கும் பொழுது வழியிலிருந்த கல் ஒன்று அவரின் காலை இடறி விட பானையில் இருந்த பால் முழுவதும் அந்தக் கல்லின் மேல் கொட்டிவிட்டது.இந்த நிகழ்வு தொடர்ந்து நான்கைந்து நாட்கள் நடைபெற பயந்து போன ராமகோனர் உடனே மன்னரிடம் சென்று முறையிட்டார். மன்னரும் வீரர்களை அழைத்துக் கொண்டு அவ்விடத்திற்குச் சென்றார். அவர்கள் அந்தக் கல்லை அங்கேயிருந்து அகற்ற முயல கோடாரி கொண்டு வெட்டினர். அப்போது அந்தக் கல்லிலிருந்து இரத்தம் பீறிட்டுக் கொண்டு வர ஆரம்பித்தது.அனைவரும் செய்வதறியாது அரண்டு போய் நிற்க வானில் ஓர் அசீரிரி கேட்டதாம்.

அதன்படி அந்தக் கல்லைத் தோண்ட தலையின் இடப்பக்கம் வெட்டுக் காயத்துடன் சிவலிங்கம் வெளிப்பட்டதாம்.(இன்னமும் மூலவரின் தலையில் வெடுக் காயத்தைக் காணலாம்) சுயம்புவாகத் தோன்றிய சிவலிங்கத்தை மூலவராகக் கொண்டு கோயில் உருவானது





# Land Disputes

போலி ஆவணங்கள் மூலம் கிரையம் செய்யப்பட்ட பத்திரப் பதிவுகளை உடனடியாக ரத்து செய்து சொத்தை உரியவர்களிடம் ஒப்படைக்க தமிழக அரசு கொண்டுவந்த சட்டத்திற்கு இந்திய குடிரசுத் தலைவர் ஒப்புதல். சட்டம் உடனடியாக நடைமுறைக்கு வந்து விட்டது!
பாதிக்கப்பட்டவர்கள் விழித்துக் கொண்டு இழந்த சொத்தை உடனடியாக மீட்க நடவடிக்கை எடுக்கலாம்! நிலத் தகராறு, பட்டா மாறுதல் போன்ற வழக்குகளில், நீதிமன்றங்கள் வழங்கி இருக்கின்ற தீர்ப்புகள்.

1. வழக்கு நிலுவையில் இருக்கும் போது
பட்டா மாறுதல் போன்ற நடவடிக்கைகளில் வருவாய்த்துறை அதிகாரிகள் ஈடுபடக்கூடாது.

நில நிர்வாக ஆணையர் - கடித எண் - K3/27160/2018, dt - 13.3.2018

சென்னை உயர்நீதிமன்றம் - W. P. No - 24839/2014, dt - 16.7.2018
W. P. No - 491/2012, dt - 4.6.2014
W. P. No - 16294/2012, dt - 4.4.2014

2. சொத்தின் பத்திரம் உரிமையாளர் பெயரில் இருந்தால்,
அவரிடமே சொத்தின் உரிமை மூலம் இருப்பதாகக் கருத வேண்டும்.
மற்றவர்களுக்கு பட்டா மாறுதல் செய்தால் அது தவறு.

S. A. No - 313 & 314/2008, dt - 11.2.2019

3. விஏஓக்கள் திருட்டுத்தனம் குறித்து ஆய்வு செய்ய,
ஒவ்வொரு மாவட்டத்திலும் துணை ஆட்சியர் தலைமையில் குழு அமைக்க வேண்டும்.
தவறு செய்யும் விஏஓக்களை
பணி நீக்கம் செய்ய வேண்டும்.

W. P. No - 13916/2019, dt - 1.7.2019

4. சொத்தின் உரிமையாளர் யார் என்பதை
வருவாய்த் துறையினர் தீர்மானிக்க முடியாது.
உரிமை இயல் நீதிமன்றத்திற்கே அந்த அதிகாரம் உள்ளது.

W. P. No - 18489/2009, dt - 1.7.2011

5. பட்டா உரிமையைக் காட்டக்கூடிய ஆவணம் கிடையாது.
பதிவு ஆவணம் எதுவும் இல்லாமல் பட்டாவை வைத்து மட்டும் ஒருவர் தான்தான் உரிமையாளர் என்று கூற முடியாது.

S. A. No - 84/2006, dt - 1.9.2015 மதுரை உயர்நீதிமன்றம்

6. பட்டா சொத்தின் உரிமையை காட்டக்கூடிய ஆவணம் கிடையாது. பட்டாவை வைத்து சொத்தில் உரிமை ஏதும் கோர முடியாது.

S. A. No - 2060/2001, dt - 2.11.2012
S. A. No - 1715/1989, dt - 25.6.2002
W. P. No - 16294/2012, dt - 3.4.2014

7. கிராம நத்தம் நிலத்தில் அரசுக்கு எந்த உரிமையும் கிடையாது. நத்தம் நிலத்தில் நீண்ட காலமாக வீடு கட்டிக் குடியிருந்து வருபவர்களுக்கு பட்டா வழங்க வேண்டும்.

Madras High Court
W. P. No - 18754, 20304, 2613/2005
DT - 4.11.2013
A. K. Thillaivanam Vs The District collector, Chennai Anna District (2004 - 3 - CTC - 270)
The executive officer, Kadathur town panjayath Vs V. S. Swaminathan (2012 - 2 - CTC - 315)

8. பட்டா பெயர் மாற்றம் செய்ய நீண்ட காலதாமதம் செய்தால் அந்த அதிகாரிக்கு தண்டம் விதிக்கப்படும்.

W. P. No - 19428/2020, dt - 6.1.2021 (K. A. Ravichandran Vs The District collector, Vellore and others)

9. போலி பட்டா வழங்கும் அதிகாரிகளை பணி நீக்கம் செய்ய வேண்டும்.

W. P. No - 11279/2015, dt - 22.3.2019, madurai high court

10. பட்டாவில் எந்த ஒரு மாற்றத்தையும் செய்ய வட்ட ஆட்சியருக்கே அதிகாரம் உண்டு. வருவாய் கோட்ட ஆட்சியர் பட்டா மாற்றம் செய்ய முடியாது. ஆனால், கோட்ட ஆட்சியர் முதல் மேல்முறையீடு அலுவலர் ஆவார்.

T. R. தினகரன் Vs RDO (2012 - 3 - CTC - 823)
அம்சவேணி Vs DRO மதுரை. W. P No - 16294/2012...

கடந்த பல ஆண்டுகளாக, சென்னை உயர்நீதிமன்றம், தில்லி உச்சநீதிமன்றம் உள்ளிட்ட நீதிமன்றங்கள் வழங்கிய, இதுபோன்ற தீர்ப்புகளை, பதிவுகளை

மக்களுக்கு விழிப்பு உணர்வு
ஏற்படுத்துங்கள்

# இம்மாத திருக்குறள்



இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு.

**பொருள்**

வீட்டில் இருந்து பொருள்களைக் காத்து இல்வாழ்க்கை நடத்துவதெல்லாம் விருந்தினரைப் போற்றி உதவி செய்யும் பொருட்டே ஆகும்

## *Golden Saying Of Swami CHINMAYANANDA*



The tragedy of human history
is decreasing happiness in
the midst of increasing comforts

# செங்கோட்டை நாராயணன் கசமுத்து சட்டநாதன் கரையாளர்

மேற்குத் தொடர்ச்சி மலையின் அடிவாரத்தில் அமைந்த இயற்கைவளம் மிகுந்த நகரம் செங்கோட்டை. தமிழர்கள் மிகுந்து வாழும் இப்பகுதியானது, முற்காலத்தில் திருவிதாங்கூர் மன்னர்களின் கட்டுப்பாட்டில் இருந்தது. 1956-இல் மொழிவாரி மாநிலங்களாக இந்தியா பிரிக்கப்படும் போது நடந்த தெற்கு எல்லைப் போராட்டத்தின் விளைவாக செங்கோட்டை தமிழ்நாட்டுடன் இணைந்தது. திருவிதாங்கூர் மற்றும் தமிழகத்தோடு இருந்த இருவேறு காலகட்டங்களிலும், செங்கோட்டையினுடைய அரசியல் மற்றும் சமூக முன்னேற்றத்தில் ஆளுமை செலுத்தியவர்கள் "ஐந்து வீட்டுக் கரையாளர்கள்". செங்கோட்டையைச் சேர்ந்த ஐந்து வீட்டுக் கரையாளர்களைப் பற்றியும் அக்குடும்பத்தின் மூலவராக விளங்கிய நாராயணன் கசமுத்து சட்டநாதன் கரையாளர் அவர்களுடைய வாழ்வு மற்றும் பணியினைக் குறித்தும் ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம் ஆகும்.

## கரையாளர்கள்

செங்கோட்டை மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளில் வாழும் யாதவகுலத்தைச் சார்ந்த ஒரு பிரிவினர் கரையாளர் எனும் பெயரால் அழைக்கப்படுகின்றனர். "கரையாளன்" எனும் சொல்லானது கிராமத்தில் அதிக செல்வங்களை வைத்திருக்கும் உரிமையாளரைக் குறிக்கும் என்று மிரோன் வின்சுலோ அகராதி விளக்கம் தருகின்றது. சென்னைப் பல்கலைக் கழக தமிழ் பேரகராதியில் கரை எனும் சொல்லுக்கு நன்செய் நிலம் அல்லது விளைநிலம் என்ற பொருளும் கொடுக்கப்பட்டுள்ளது. இதனை அடிப்படையாக வைத்து பார்க்கும் பொழுது அதிக எணிக்கையில் நிலங்களை வைத்து ஆளுகை செய்த யாதவகுலத்தின் ஒரு பிரிவினருக்கு "கரை ஆண்டவர்கள்" எனும் பட்டம் கொடுக்கப்பட்டிருக்கலாம். கரை ஆண்டவர்கள் எனும் பட்டமானது பின்னாட்களில் மருவி "கரையாளர்" என்று மருவியிருக்கலாம் என்பது என்னுடைய கருத்து. இக்கருத்துக்கு வலுசேர்க்கும் விதமாக செங்கோட்டையைச் சுற்றி வாழும் கரையாளர் பிரிவினர் தங்களுடைய குலத்தொழிலான கால்நடை பராமரிப்போடு மட்டும் நில்லாமல் அதிக எணிக்கையிலான விளை நிலங்களுக்கு உரிமையாளர்களாகவும் விளங்குகின்றனர். இத்தகைய இனப்பிரிவில் தான் நாராயணன் கசமுத்து சட்டநாதன் கரையாளர் அவர்கள் தோன்றினார்.

## பிறப்பு:

